DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 298 / 2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | முருகன் (P.w. 8) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of June 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் தற்போது இருஞ்சிறையில் குடியிருந்து வருகிறேன். நான் கோவில் பூசாரியாக வேலை செய்து வருகிறேன்.என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை 24.10.2020ம் தேதியன்று ஊருக்குள் இருக்கும் அய்யனார் கோவிலில் பூஜையை முடித்துவிட்டு கோவில் முன்பு இருந்தபோது நகை திருட்டு சம்பந்தமாக கிராமத்தார் பேசியதின்பேரில் திருட்டு நடைபெற்ற இடமான இருஞ்சிறை விலக்கு அருகே நானும், எனது நண்பர் பாலமுருகனும் மாலை 6.30மணியளவில் சென்று பார்த்தபோது நரிக்குடி போலிசார் ஏற்கனவே சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து வைத்திருந்தார்கள் நாங்கள் 10 நிமிடம்

கழித்துதான் அந்த இடத்திற்கு சென்றோம். அதன்பிறகு அவர்கள் எழுதி வைத்திருந்த பார்வை மகஜரில் நானும், பாலமுருகனும் கையொப்பம் செய்தோம். (**அந்த பார்வை மகஜர் அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

பார்வை மகஜரில் குற்ற எண் அதன் பிரிவுகள் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இருஞ்சிறையில் இருந்து நரிக்குடி மெயின்ரோடு எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் 4 கிமீ தூரம் இருக்கும். நரிக்குடி சாலையின் இருபுறமும் வயல்காட்டில் ஆட்கள் நிறையபேர் வேலை செய்வார்கள் என்றால் சரிதான். போலிசார் எனது ஊரில் வைத்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் இல்லை, நான் சம்பவ இடத்திற்கு சென்றேன், இருஞ்சிறை விலக்கில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். நானும் பாலமுருகனும் கையொப்பம் செய்யும்போது ஆட்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். பாலமுருகனும் இருஞ்சிறை விலக்கு பிரிவில் வைத்து கையொப்பம் செய்தார் என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **C.C.No. 298 / 2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ராஜா (P.w. 7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of June 2026

( எதிரி ஆஜர் ).

**முதல் விசாரணை –**

நான் தற்போது தேனுாரில் குடியிருந்து வருகிறேன். நான் டிராக்டர் வைத்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 5 வருடத்திற்கு முன்பு மறையூருக்கு கடலை பருப்பு போட இருஞ்சிறை பிரிவு ரோட்டில் மாலை 5.00மணியளவில் நான் டிராக்டரில் சென்றபோது நரிக்குடி போலிசார் என்னிடம் வந்து பெயரையும், ஊரையும் கேட்டார்கள். நான் எனது முகவரியை கூறினேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அ.த.கு.வி :–

கடந்த 24.10.2020ம் தேதியன்று காலையில் மறையூர், இருஞ்சிறை கிராமங்களுக்கு டிராக்டர் மூலம் கடலை விதைப்பு உழவு போட்டுக் கொண்டிருந்ததாகவும், அப்போது மதியம் 2.30 மணியளவில் மறையூர் காலணியைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவரது புஞ்சை காட்டிற்கு கடலை விதைக்க போக வேண்டி இருஞ்சிறை விலக்கில் டிராக்டரை நிறுத்திவிட்டு நானும், மகாலிங்கமும் கடலை விதை கொண்டு வரும் ஆளை கூப்பிட வேண்டி காத்திருந்ததாகவும், இருஞ்சிறை விலக்கிலிருந்து கட்டனூரைப் பார்த்தவாறு சுமார் 40 முதல் 45 வயது மதிக்கத்தக்க சிவப்பு கலர் சட்டை ஒரு நபர் சிவப்பு கலர் பைக்கில் ஒரு பொம்பளைய பின்னால் ஏற்றிக் கொண்டு கட்டனூர் ரோட்டில் போனார் என்றும், அவர்கள் போன ஐந்து நிமிடத்திற்குள் மறுபடியும் அந்த நபர் மட்டும் திரும்ப நரிக்குடியைப் பார்த்தவாறு பைக்கை விரட்டிக் கொண்டு வந்தார் என்றும், பின்னால் ஏறிப்போன பொம்பளை வரவில்லை என்றும் நாங்கள் விசாரித்தபோது பின்னால் போன பெண் நரிக்குடியிலிருந்து லிப்ட் கேட்டு 100 மீ தாண்டி போனதும் பைக்கை ஓட்டிப் போனவன் இருஞ்சிறை விலக்கிலிருந்து 100 மீ தாண்டி போனதும் பைக்கில் செயின் கழன்றுவிட்டது என்று சொல்லி அவரை இறக்கிவிட்டு அவரது கழுத்தில் போட்டிருந்த நாலு பவுண் செயினை அறுத்துக் கொண்டு வேகமாக சென்றுள்ளார்என்றும் அவன் ஆள் தோற்றம் குள்ளமான தோற்றம் முறுக்கு மீசையுடன் காணப்பட்டார் என்றும் பைக்கில் பின்னால் போய் செயினை பறி கொடுத்த நபர் இருஞ்சிறையைச் சேர்ந்த திருப்பதி மனைவி பரமேஸ்வரி என்று நாங்கள் தெரிந்து கொண்டோம் என்றும் , அதன் பின்னர் பரமேஸ்வரி சம்பவம் பற்றி புகார் கொடுத்ததாகவும் தெரிந்து

**கொண்டேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.